DINAMALAR

PAGE NO: 03 DATE: 01.09.2023

# புதுச்சேரி பல்கலையில் ஜி20 கொடி கண்காட்சி

**புதுச்சேரி,செப்.1–**

புதுச்சேரி பல்கலைக்கழக ஆனந்த ரங்கபிள்ளை நூலகத்தில் ஜி–20 நாடுகளின் கொடிக் கண்காட்சி நடந்தது.

துணைவேந்தர் குர்மீத் சிங் கண்காட்சியை துவக்கி வைத்து பார்வையிட்டார்.

பல்கலைக்கழக நூலகர் விஜயகுமார் வரவேற்றார்.கண்காட்சியில் ஜி20 நாடுகளின் தேசியக் கொடிகள் மட்டுமின்றி, அவற்றின் தனித்துவமான வடிவமைப்புகள், வரலாற்று முக்கியத்துவம் மற்றும் கலாச்சார முக்கியத்துவம் குறித்தும் விளக்கப்பட்டது.துணைவேந்தர் குர்மீத் சிங் பேசும்போது, ஜி20 நாடுகளின் வரலாறு,கலாச்சாரம்,நோக்கங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த இக்கண்காட்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உலகிற்கு ஜி20 நாடுகளின் பங்களிப்பு அவசியம் என்று குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியில் பல்கலைக்கழக இயக்குநர் ராஜிவ் ஜெயின், பேராசிரியர்கள்,ஆசிரியர்கள்,நிர்வாகப் பணியாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள்,ஆராய்ச்சி அறிஞர்கள் கலந்து கொண்டனர்.



புதுச்சேரி பல்கலைக்கழக ஆனந்த ரங்கபிள்ளை நூலகத்தில் ஜி–20 நாடுகளின் கொடிக் கண்காட்சியை துணைவேந்தர் குர்மீத்சிங் துவக்கி வைத்தார்.

MAALAI MALAR

PAGE NO: 02

DATE: 01.09.2023



ஜி20 கொடி கண்காட்சியை துணைவேந்தர் குர்மித்சிங் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்த காட்சி.

# புதுவை பல்கலைக்கழகத்தில் ஜி-20 கொடி கண்காட்சி

புதுச்சேரி, செப்.1– புதுவை பல்கலைக்கழக ஆனந்தரங்கப்பிள்ளை நூலகத்தில் ஜி–20 நாடுகளின் கொடி கண்காட்சி நடந்தது.

துணைவேந்தர் குர்மீத்சிங் கண்காட்சியை தொடங்கி வைத்து பார்வையிட்டார். நூலகர் விஜயகுமார் வரவேற்றார்.

கண்காட்சியில் ஜி–20 நாட்களின் தேசிய கொடிகள் மட்டுமின்றி, அவற்றின் தனித்துவமான வடிவமைப்புகள், வரலாற்று முக்கியத்துவம், கலாசாரம் குறித்து விளக்கப்பட்டது. நிகழ்ச்சியில் பல்கலைக்கழக இயக்குனர் ராஜீவ்ஜெயின், பேராசிரியர்கள், ஆசிரியர்கள், நிர்வாக பணியாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆராய்ச்சி அறிஞர்கள் பலர் கலந்துகொண்டனர்.